தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்
ந.க.எண். 056888 / சி2 / இ1 / 2025 நாள்.11.09.2025

| | | |
|---|---|---|
| பொருள் | : | தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி – ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 2023–24ம் ஆண்டுக்கு பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் – பணிநியமனம் வழங்கியது – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வாழ்த்துரை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது – விழாவில் கலந்து கொள்ளுதல் சார்பானது. |
| பார்வை | : | 1.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (ப.தொ) செயல்முறைகள் ந.க.எண்.056620/சி5/இ1/25 நாள். 3.9.2025, ந.க.எண்.056888/சி2/இ2/2025 நாள்.3.9.2025, ந.க.எண்.56900/சி2/இ1/2025 நாள்.3.9.2025, ந.க.எண்.38549/சி3/இ2/2025 நாள்.3.9.2025 மற்றும் ந.க.எண்.037584/சி3/இ1/2025 நாள்.3.9.2025 |
| | | 2.அரசுக் கடிதம் எண்.7979/பக3(2)/2025–1 நாள்.11.9.2025 |

–0–

2023–24ம் ஆண்டுக்கான ஆசிரியர் தேர்வு வாரித்தால் நேரடி நியமனம் மூலம் பள்ளிக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அரசு / நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பணிநாடுநர்களுக்கு பார்வை–1ல் காணும் செயல்முறைகளின்படி பணிநியமனத்திற்கான கலந்தாய்வு நடத்தி அவரவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் பள்ளியினை தெரிவு செய்து பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்காண் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டு 08.09.2025 முதல் தெரிவு செய்யப்பட்ட பள்ளிகளில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வரும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வருகின்ற 20.09.2025 (சனிக்கிழமை) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வாழ்த்துரை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தமிழக முதலமைச்சர் அவர்களால் வாழ்த்துரை வழங்கும் நிகழ்ச்சி கீழ்க்கண்டவாறு இடம் மற்றும் நேரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இடம்: | நேரு உள்விளையாட்டு அரங்கம், சென்னை<br>(Central Railway Station Backside) |
| நாள்: | 20.09.2025 (சனிக்கிழமை) |
| நேரம்: | காலை 10.30 |

மேற்காண் வாழ்த்துரை வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள தங்கள் மாவட்டத்தில் புதிதாக பணிநியமனம் செய்யப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு தகவல் அளித்து ஒரு பொறுப்பு நபரை நியமித்து அந்நபருடன் அவ்வாசிரியர்களை மேற்படி விழா நடைபெறும் இடத்திற்கு அன்று காலை 07.00 மணிக்குள் (20.09.2025) பதிவு செய்திடும் வகையில் அழைத்துவர நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் புதிதாக நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியருடன் கூடுதலாக ஒரு நபர் அழைத்து வர அனுமதிக்கலாம்.

மேலும் இவ்விழாவில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், இந்து அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க உள்ளார்கள்.

எனவே மேற்காண் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் புதிதாக நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வாழ்த்துரை வழங்கும் நிகழ்ச்சியில் தவறாமல் பங்கேற்கும் வகையில் கலந்து கொள்ள அறிவுறுத்திடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின்னஞ்சல் வழியாக)